திரு. ஜி.ஜி. குருமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் காங்கேயம் இனத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதுபோன்று பர்கூர் காளைகள் என்ற ஒரு சிறந்த இனம் இருக்கிறது. அது கொஞ்சம், கொஞ்சமாக அழிந்துகொண்டு இருக்கிறது. அதைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் இனத்தையும் அழியாமல் காப்பாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில்(*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2, தகவல் கோரல்

(அ) பவானிசாகர் அணையிலிருந்து அரக்கன்கோட்டை தடப்பள்ளி வாய்காலில் தண்ணீர் திறந்து விடாததால் பயிர்கள் பாதிக்கப் பட்டிருப்பது குறித்து

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து ஏப்ரல் 15-ஆம் தேதி தடப்பள்ளி அரக்கன்கோட்டை வாய்க் காலில் தண்ணீர் எப்போதும் திறந்து விடப்படுவது வழக்கம். இந்த ஆண்டு தண்ணீர் திறந்துவிடாத காரணத்தால் பருவக் காலத்தில் பயிர் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. விவசாயிகள் சுமார் 24,504 ஏக்கர் நிலங்களில் பயிர் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே இருந்து அமைச்சருக்கும் தகவல் வந்திருக்கலாம். தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறது என்று சொல்லியிருக்கலாம். இருந்தாலும் கூட காளிங்கராயன் பாசனப் பகுதியில் மூன்றாவது போகத்திற்கு பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். எனவே தண்ணீர் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லாமல் 15-ஆம் தேதியன்றே திறந்து விடவேண்டிய தண்ணீரை அந்த வாய்க்காலில் மிக விரைவாகத் திறந்து விடுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கன்கோட்டை தடப்பள்ளி வாய்க்காலில் 15-4-1990-இல் தண்ணீர் திறந்துவிட்டிருக்கவேண்டும். அப்படி திறந்து விடாததற்கு இரண்டு காரணங்கள். ஒன்று கீழ் பவானிக்குத் தண்ணீர் வருகிற பில்லூர் அணைக்கட்டில் இப்போது ஜெனரேட்டர் ரிப்பேர் ஆகி இருக்கிறது. 'மெய்ன் டனன்ஸ்' வேலையும் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. எனவே 15 நாட்களுக்குள்ளாக தண்ணீர் விடுவதற்கு சாத்தியம் இல்லை என்று மின்வாரியத்துறை தெரிவித்திருக் கிறது. ஆக 1-5-1990 வரை பில்லூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீர் எதிர்பார்க்க முடியாத நிலைமை இருக்கிறது. இரண்டாவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் இப்போது காளிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் பாய்ந்துகொண்டிருக்கிறது. எனவே 1-5-1990 முதல் அரக்கன் கோட்டை தடப்பள்ளி வாய்க்காலில் தண்ணீர் விட வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். பில்லூர் அணைக் கட்டைப் பொறுத்தவரையில் மின் வாரியம் கேட்டுக்கொண்ட தற்கிணங்கத்தான் பதினைந்து நாட்களுக்குத் தண்ணீர் திறந்து விடுவதைத் தள்ளி வைக்க நடவடிக்கைகள் எடுத்திருக் கிறோம். அதிலே கூட 10 நாட்கள்தான் பாக்கி இருக்கின்றன. எனவே 1-5-1990-ல் தண்ணீர் திறந்துவிடப்படும்.

(ஆ) ஸ்ரீவைகுண்டம் பகுதியிலே உள்ள பயிர்களைக் காப்பாற்ற தண்ணீர் விட வேண்டியதன் அவசியம் குறித்து

திரு. எஸ். டேனியேல் ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தில் இந்த ஆண்டு தொடர்ந்து பெய்த பலத்த மழை காரணமாக ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் சிவகளை, பெருங்குளம் ஆகிய பாசனப் பகுதி களில் நெற்பயிர் சுமார் 5000 ஏக்கர் அழிந்து நாசமாகி உள்ளது. அதேபோல் ஸ்ரீவைகுண்டம் கஸ்பா, பேரூர் ஆகிய குளத்துப் பாசனப் பகுதிகளில் கிட்டத்தட்ட 2000 ஏக்கர் நெற்பயிர் பூச்சியினால் தாக்கப்பட்டுள்ளது, இந்த ஆண்டு பழங்குடியினர் விவசாயத்திற்காக அட்வான்ஸ் கார் விவசாயத் திற்காக ஸ்ரீவைகுண்டம் வடக்கால் பகுதியில் ஆறுமுகமங்கலத் திற்கும் தென்கால் பகுதியில் கடப்பா ஆத்தூர் குளத்திற்கு மட்டும் தான் தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது.

10-10 மணி

கடந்த 1988-ஆம் ஆண்டு ஆளுநர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 50 அடி தண்ணீர் பாபநாசம் அணையில் நீர்மட்டம் இருந்தபோது கூட மருதூர் கீழக்கால், ஸ்ரீவைகுண்டம் கஸ்பா, பேரூர், சிவகளை, பெருங்குளம் ஆகிய குளங்களுக்கும், மருதூர் மேலக்கால், வெள்ளூர் குளங்களுக்கும் அட்வான்ஸ் கார் விவசாயம் செய்வதற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இப்போது பாபநாசம் அணையில் 70 அடி நீர் மட்டமும் மணிமுத்தாறு